## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - 2017

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கூட்டுத்தாபனம் தொடர்ந்திருத்தல்

1999 ஆம் ஆண்டின் போது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் தனியுரிமைத் தன்மை நீக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட பிரதான வருமான வழியாக இருந்த பகிர்ந்தளிக்கும் தரகுப் பணம் இழக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமானம் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்கு போதுமான அளவில் காணப்படாமையின் அடிப்படையில் பொதுத் திறைசேரியினால் 2011 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சம்பளத்திற்காக நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேலும், மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியிலும் கூட்டுத்தாபனம் திறைசேரி மானியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்ற நிலைமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி உதவியொன்று இன்றி கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்வது நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01

(i) ஊழியர் சேமலாப நிதியத்திற்காக 2006 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை வாழ்க்கை செலவினங்கள் கொடுப்பனவை கருத்திற் கொள்ளாமல் பங்களிப்பு கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 2,763,753 ஆன் நிலுவை தொகையும் ரூபா 1,381,876 ஆன மிகை கொடுப்பனவொன்றும் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்ததுடன் அதற்காக 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிலையத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7**

---

நியமத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம், திறைசேரி உண்டியல் மற்றும் மீள்விற்பனை உண்டியல்களை கணக்கீடு செய்யும் போது 03 மாதம் அல்லது அதற்குக் குறைந்த முதலீடுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் சமனான திரவச் சொத்தாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மூன்று மாத காலத்தில் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த திறைசேரி உண்டியல்களின் பெறுமதியான ரூபா 6,863,993 மற்றும் உண்டியல்களின் மீள்விற்பனை ரூபா 97,461,399 என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

---

(i) நியமத்தின் 79(அ) பந்தியின் பிரகாரம் பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தேறிய புத்தகப் பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் களனி திரைப்பட அரங்கத்திலுள்ள கறுப்பு, வெள்ளை மற்றும் நிற ஆய்வுகூடங்களிற்குச் சொந்தமான தொழில்நுட்ப ரீதியாக வழக்கற்றுப் போன பழைய சொத்துக்கள், கணக்கீடு செய்தல் மற்றும் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 51 பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக ரூபா 69,032,058 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் அவை மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 34 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் முகப்பு பெறுமதியிலிருந்து பொருண்மையான வகையில் வேறுபடும் போது அந்த ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்திற்குரிய பௌதாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 224 ஆம் இலக்க வீதி வரிக் காணி மற்றும் களனி களனி திரைப்பட அரங்கின் காணி 2007 ஆம் ஆண்டின் போது இறுதியாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இக்காணி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

---

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீடொன்று மேற்கொண்டு ஊழியர் சேவைக்குப் பின்னரான நலன் ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக நிறுவனத்தால் சேவையின் பின்னரான நலன்களின் ஏற்பாடுகளுக்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் ஒவ்வொரு ஊழியருக்கும் சேவையாற்றிய ஒரு வருடத்திற்கு அரை மாதத்திற்குச் சமமான பணிக்கொடைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நிர்வாக சபையின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த திரைப்பட தயாரிப்பு கடனான பா 1,732,530 தொடர்பாக (ஆ) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தின் 119 ஆம் பந்தியின் பிரகாரம் களணி பல்கலைக்கழக திரைப்பட அரங்கத்தில் தயாரிப்பிற்கு பின்னரான நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மென்பொருள் நிதிக்கூற்றுக்களில் அருவச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நியமத்தின் 75(இ) ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் கட்டுப்பாட்டு சபை, செலசீனே நிறுவனம் மற்றும் சார்க் கலாசார நிலையத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடம் தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் போது ஜனாதிபதி விருது விழாவிற்காக கிடைத்திருந்த ரூபா 33 மில்லியான வருமானமாக இனங்காணப்படாமல் ஜனாதிபதி விருது வவிழா செலவினத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டி ருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களினதும் ரித்மா சபையின் புத்தகங்களினதும் பிரகாரம் உள்ளக திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் ரூபா 5,763,596 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) திறைசேரி உண்டியல் மீள் விற்பனையின் வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதி ரூபா 171,078,340 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 171,694,038 ஆக இருந்தமையால் ரூபா 615,698 ஆன விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நிதி கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட இருப்புக்களின் பெறுமதி ரூபா 5,253,875 ஆக இருந்த போதிலும் கணக்குப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் இருப்புத் தொகையில் ரூபா 718 பெறுமதியான 3 உள்நாட்டு திரைப்படங்களும் 9 வெளிநாட்டு திரைப்படங்களும் காணப்பட்டன.

**2.2.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை**

ரூபா 58,466,046 பெறுமதியான கடன்பட்டோருக்கான சுயாதீனமீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும் ரூபா 11,088,220 பெறுமதியான கடிதங்கள் தவறான முகவரிகள் காரணமாக திருப்பி வந்திருந்ததுடன் ரூபா 47,377,826 பெறுமதியான கடிதங்களுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்படி கடன் மீதிகளை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருதானை, சினேசிட்டி திரைப்பட மண்டபத்திலிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2016 மே 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த திரைப்பட வாடகையான ரூபா 12,343,433 தொகையை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 மே 31 ஆந் திகதிக்குப் பின்னர் நாளாந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்பப்படாமையினால் அறவிட வேண்டிய திரைப்பட வாடகை வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கும் கணக்கீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

(ஆ) கொட்டஹேன சினேர்வேல்ட் சினிமா திரையரங்கு தொகுதிக்காக ரூபா 1,009,548 கடன் திரைப்பட வாடகை மற்றும் கூட்டுத்தாபன பொறுப்பு, வட்டி மற்றும் வரவுத்தாள் பணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 19,332,544 அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சுயமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வதற்காக 1997 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற இழப்பீட்டுத் தொகையிலிருந்து மீதியாகக் காணப்பட்ட ரூபா 5,000,000 தொகை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1971 இன் நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) மற்றும் 11 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை செலவினத்தை விஞ்சிய வருமானமான ரூபா 140,531,882 தொகை திறைசேரிக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீள் விற்பனைப் பணம் என்பன முறையே ரூபா 100,117,116 மற்றும் ரூபா 173,097,656 தொகை நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரமின்றி முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 381(1) | அலுவலக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரூடாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 90,549,292 தொகையான 08 வங்கி நடைமுறைக் கணக்குகள் கூட்டுத்தாபனத்தி னால் பராமரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தலொன்று காணப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2015 யூலை 22 ஆம் திகதிய அமப/05/0741/041/012 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களால் வெளியேற்றப்படுகின்ற செப்பு, பித்தளை அலுமினியம், ஈயம் போன்ற இரும்பல்லாத உலோகங்கள் மற்றும் விசேட வகையான இரும்பு, இரும்புத் தாது மற்றும் உருக்குத் துண்டுகள் என்பன கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு விற்பனை செய்யப்படக்கூடியதாக இருந்த போதிலும் பல்கலைக்கழக திரைப்படக்கூடத்தின் பழைய கட்டிடமொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்த இரும்பு, உடைந்த துண்டுகள் மற்றும் படச் சுருள்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1999 யூன் 17 ஆந் திகதிய தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் வழிகாட்டல் 9 ஆம் பிரிவு | திரைப்பட காப்பகமொன்றைத் தாபித்து அது முகாமைத்துவ திரைப்பட கூட்டுத்தாபனத்தால் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், திரைப்பட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 273 பழைய திரைப்படங்கள் மாத்திரம் சுவடிக் கூடத் திணைக்களத்தின் பாதுகாப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. எனினும், 1947 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை திரையிடப்பட்ட 962 திரைப்படங்கள் மற்றும் புதிய திரைப்படங்களின் பிரதிகள் என்பவற்றை பாதுகாப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மதுவரிக் கட்டளை இலக்கம் 902 இன் 111 ஆம் பட்டோலையின் (ஏ) மற்றும் (சீ) பிரிவுகள் | வணக்கஸ்தலங்கள் அல்லது பாடசாலைகளுக்கு 500 மீற்றருக்குள்ளும் மதுபானங்கள் விற்பனை செய்யும் இடத்திலிருந்து காணப்பட வேண்டிய தூரம் அடி 500 இற்குக் குறைவாயின் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்தினை விநியோகிக்க முடியாதிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் 47 சினிமா திரையரங்குகளில் வெளிநாட்டு குடிவகைகளை விற்பனைக்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2017 சனவரி 23 ஆந் திகதிய தணிக்கை சபையின் அண்மித்த 4711 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் 6 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தின் எழுத்துமூல அங்கீகாரமொன்றில்லாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு எவ்வித மாற்றங்களும் செய்யப்படக்கூடாத போதிலும் தணிக்கை சபையின் கட்டிடத்திற்கு அங்கீகாரமின்றி சேர்த்தல்கள் இடம்பெற்றிருந்தன. |
| (எ) | 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 7(2)(அ)(i) பிரிவு | கல்வி விடயத்திற்கு அல்லது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் கேட்டதன் பின்னர் பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அங்கத்தவர்களை கூட்டுதாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவரகளாக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அந்நியமனங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. |

**2.5 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

முறையான அதிகாரமொன்று இல்லாமல் கணக்கீட்டு எழுதுனரின் அங்கீகாரத்தின் பேரில் அறவிட முடியாக்கடன் சீராக்கமாக ரூபா 14,736,803 பெறுமதியான நாட்குறிப்பு பதிவுகள் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் திறைசேரி மானியம் கிடைப்பதற்கு முன்னர் ரூபா 51,970,405 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னயை ஆண்டின் நட்டம் ரூபா 34,638,806 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 17,331,599 தொகையான வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது. திரைப்பட விநியோக தரகு வருமானம் ரூபா 9,157,132 ஆல் வீழ்ச்சியடைந்தமை மற்றும் அறவிட முடியாக்கடனுக்காக இழப்பீட்டு சீராக்கம் ரூபா 11,962,984 ஆல் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது திறைசேரி மானியத்தைப் பெறுவதற்கு முன்னர் நிதி விளைவில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 58,337,827 தொகையான அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 51,970,405 ஆக இருந்தது. எனினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 19,157,095 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 52,207,037 வரை அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

(அ) மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திட்டம் கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை மேலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காலாண்டு ரீதியாக இலக்கப்படப்பட்ட செயற்பாடுகளை இனங்கண்டிருந்த போதிலும் செயலாற்றல் மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களனியில் அமைந்துள்ள சரசவி கலையகத்தில் தயாரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 25 மில்லியன் மற்றும் திரைப்பட பாதுகாப்பு காப்பகமொன்றை தாபித்தல் மற்றும் திரைப்படங்களை பாதுகாக்கும் கலையகத்திற்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் அப்பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் திரப்பட கலைஞர்களினதும் தொழில்நுட்ப நிபுணர்களினதும் இயலளவினை மேம்படுத்துவதற்கு தேசிய பயிற்சி பாடசாலையொன்று தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 50 மில்லியனில் ரூபா 500,000 மாத்திரம் பரிசோதனைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

சகல சினிமா திரையரங்கும் ஆகக் குறைந்தது மாதமொன்றுக்கு ரு தடவையாவது பரிசோதனையொன்று உட்படும் வகையில் அதாவது ஒட்டுமொத்தமாக 1500 காட்சிகளைப் பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 850 காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் 10 தொழிலாளர்களின் மிகையொன்று காணப்படும் போது மாதாந்தம் ரூபா 293,490 தொகை செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்த தனியார் சேவை வழங்குனருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தேவையான ஊழியர் எண்ணிக்கையை ஈடுபடுத்துவதற்கு இந்த நிறுவனம் தவறியிருந்தமையின் காரணமாக திருப்திகரமற்ற சேவை வழங்கலொன்று தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் மற்றும் திரைப்பட தயாரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள கடன் பணம் ரூபா 192 மில்லியன் தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கோரப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் பதிலாக 2015 ஆகஸ்ட் மாதத்தின் PE/ME/NFC/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவினாலும் (COPE) சிபாரிசு செய்யப்பட்டதன் பிரகாரம், அமைச்சு மட்டத்தில் குழுவொன்று நியமித்து நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், நியமிக்கப்பட்டுள்ள குழுவிற்காக அமைச்சின் பிரதிநித்துவம் இடம்பெற்றிருக்காமை.

(ii) உரிய கடன் பணத்தை அறவிடுவதற்காகவுள்ள சட்ட ரீதியான இயலுமை தொடர்பாக புலனாய்வு செய்யாமை மற்றும் அவ்வாறு புலனாய்வு செய்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற கடன்பட்டோரின் சட்டத்தின் பிரகாரம், உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) ஆகக் குறைந்தது தற்போது செயற்படுகின்ற சினிமா திரையரங்குகளிலிருந்து தவணைப் பணமாக, நீண்ட கால அல்லது பெறப்பட்ட கடன் பணத்தை தீர்த்து கொள்வதற்கு முறையான செயல்நடைமுறையொன்று மேற்கூறப்பட்ட கடன் குழுவினால் சமர்ப்பிக்கப்படாமை.

(iv) மேற்கூறப்பட்ட (ii) மற்றும் (iii) இல் அறவிடக்கூடிய கடன் தொகை தவிர மிகுதித் தொகையை பதிவழிப்பதற்காக அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பௌத்தலோக மாவத்தையில் ஆதன வரி இலக்கம் 303 இலுள்ள காணியின் சட்டரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கும் காணியின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல் மீள்விற்பனைகளின் பெறுமதி ரூபா 273,214,772 ஆக இருந்ததுடன் ஒரு வங்கியிலேயே தொடர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதன்மைச் சந்தையில் அரசாங்க வங்கிகளிலிருந்து கூறுவிலை கோரி மிகவும் சிறந்த நலன் பங்களிப்பு வட்டி வீதத்தின் அடிப்படையில் முதலீடு செய்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 மார்ச் 31 இல் நடைபெற்ற சனாதிபதி விருது வழங்கலுக்காக ரூபா 44,394,717 ஆன செலவினமொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இவ் விழாவிற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.2.1 வழிகாட்டலின் பிரகாரம் போட்டி விடைகள் கோரப்படாமல் நிறுவனம் தெரிவு செய்யப்பட வேலையிலிருந்த போதிலும் அதற்கு முரணாக விளம்பர செயற்பாடுகள் மற்றும் விளம்பர நிகழ்ச்சிகள் மாத்திரம் செலசினே நிறுவனத்திற்கு கையளிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 2008 திசெம்பர் 2 ஆந் திகதிய 08/2253/338/043 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக மேடைகளை தயாரித்தல், வெளிச்சமூட்டுதல் மற்றும் கலை அம்சங்களும் செலசினே நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) விருது வழங்கல் விழாவிற்காக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 38,170,000 ஆன மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் நிகழ்ச்சி முகாமைத்துவத்திற்காக ரூபா 19,400,000 மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கையில் செலசினே நிறுவனத்தின் நிகழ்ச்சி முகாமைத்துவத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மதிப்பீடான ரூபா 27,682,469 ஆன (வரியின்றிய) தொகைக்கு 2017 பெப்ரவரி 23 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை விஞ்சி ரூபா 8,282,469 தொகைக்கு உடன்படிக்கை செய்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு இச் செயற்பாட்டிற்குரிய 6 அறிக்கைகள் வழங்கியிருந்ததுடன் அதில் 02 அறிக்கைகள் 2017 மார்ச் 30 ஆக இருந்தது. விழா 2017 மார்ச் 31 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தது. விழா நடைபெற்று முடிந்ததன் பின்னரும் 2 அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் பணிகளும் சரியாக நிறைவேற்றப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(iv) மேற்குறித்த (ii) இல் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 27,682,469 தொகையில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் மேடை அமைப்பதற்கு ஷரூபா 3,103,950 தொகை மேடை அலங்கரிப்பு முறைமைக்காக ரூபா 1,943,500 தொகையும் மேடையின் ஏனைய கலை அம்சங்களுக்காக ரூபா 2,587,500 தொகையுமாக மொத்தம் ரூபா 7,654,750 ஆன் அசாதாரணமான தொகையொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

(v) செலசினே நிறுவனத்துடனான ரூபா 27,682,469 ஆன உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் உணவு மற்றும் பான வகைகளுக்காக ரூபா 1,955,500 மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பத்தில் ரூபா 6,250,000 தொகை செலசினே நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 4,294,500 தொகை உடன்படிக்கைக்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் விழாவிற்கான திரட்டிய செலவினம் ரூபா 44,394,717 என காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை மிகைத்து செலசினே நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாக ரூபா 9,854,285 அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த அட்டுறு செலவினத்திற்கு உரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் இருந்ததுடன் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அட்டுறு செலவினம் உறுதிப்படுத்துவதற்கு பட்டியல் அல்லது ஏனைய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுருக்கவில்லை.

(vii) சனாதிபதி விருது வழங்கல் விழாவிற்காக செலசினே நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 27,682,489 ஆக இருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரை ரூபா 27,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுளின் பிரகாரம் மேலும் ரூபா 9,854,285 தொகை அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உடன்படிக்கை தொகையை மிகைத்து கொடுப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துடன் எவ்வித தொடர்பில்லாத அல்லது அடிப்படையாக கொண்ட சட்ட ஏற்பாடுகள் இல்லாமல் ரிக்மா சபையின் 18 சினிமா திரையரங்குகளுக்கு பல வருடங்களுக்கும் ஏனைய சபையின் 29 திரையரங்குகளுக்கு மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு மதுபான அனுமதிப்பத்திரம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் பிரகாரம் வெளிநாட்டு குடிபானங்கள் பார்வையாளர்களுக்கு மாத்திரமே வழங்க முடியுமான போதிலும் 2017 நவம்பர் மாதம் சப்ரகமுவ மாகாணத்தின் 2 சினிமா திரையரங்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 9 நாட்கள் திரைப்பட கண்காட்சிக்களுக்காக விற்பனை செய்யப்பட்டிருந்த நுழைவுச்சீட்டுகள் 4 ஆக இருந்ததுடன் மதுபான விற்பனையால் கிடைத்த வருமானம் ரூபா 405,690 ஆக இருந்தமையால் பார்வையாளர் அல்லாத தரப்பினருக்கும் வெளிநாட்டு குடிவகை விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) அரச அனுசரணையின் கீழ் வெளிநாட்டு குடிவகை விற்பனை அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் இலங்கை அரசின் ''மத்தட்ட தித்த" கொள்கைக்கு எதிரான செயற்பாடாக இருந்ததுடன் குடும்ப திரைப்படங்கள் மற்றும் சிறுவர் திரைப்படங்கள் காட்சிப்படுத்தும் சந்தர்ப்பங்களில் கூட வெளிநாட்டு குடிவகை அருந்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கும் வகையில் சினிமா கொட்டகைகளுக்கான வெளிநாட்டு குடிபான வகை அனுமதிப்பத்திரங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

**4.4 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு திரையரங்கு தயாரிப்பாளர் மற்றும் ஏனைய கடன் மற்றும் ஊழியர் முற்பணமாக கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 578,661,380 அறவிடப்பட வேண்டியிருந்தது. அக்கடன்பட்டோரிடமிருந்து ரூபா 161,470,386 தொகைக்காக நட்டஈட்டு சீராக்கமொன்றும் ரூபா 119,490,277 இற்காக மிகை ஒதுக்கீடும் ரூபா 4,618,805 தயாரிப்பு கடன் வட்டி ஒதுக்கீடும் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும் மேற்குறித்த கட்பட்டோரிடமிருந்து ரூபா 285,579,469 தொகை அதாவது 49 சதவீதத்தை மீள அறவிடுவதில் நிச்சயமற்றதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 8 வங்கிக் கணக்குகளில் 2017 ஆம் ஆண்டில் மாதாந்த சராசரி மீதி ரூபா 50,503,509 ஆக இருந்ததுடன், அந்தத் தொகையில் ஒரு பகுதியை குறுங்கால முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 870,659 கூட்டுத்தொகையான புகை படச்சுருள் மற்றும் இரசாயனப் பொருட்களின் இருப்பொன்று 2014 ஆம் ஆண்டிலிருந்து விநியோகிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட நூலகப் புத்தகங்களின் அளவொன்று களணி பல்கலைக்கழக திரைப்படக் கூடத்தில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிமையின் காரணமாக அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன் தற்போதைய தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் எண்ணிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், அத்தியவசியமான 02 பதவிநிலைப் பதவிகள், நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக திட்டங்கள் தயாரிக்கும் போதும், இலக்கினைக் கட்டியெழுப்பும் போதும், அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போதும் உரிய வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்பு இல்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை கோவையின் 4.1.1 பிரிவின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு பட்டமொன்று பெற்றுக் கொண்டதன் பின்னர் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம் உள்ள உத்தியோகத்தர் பொது முகாமையாளராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக மொத்தம் ரூபா 1,671,808 தொகை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகியும் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளாமலும் அல்லது அமைச்சு செயலாளரின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் சாரதியொருவர் ஆர்சேர்ப்பு செய்யப்பட்டு மாதாந்தம் படிகள் மற்றும் மேலதிக நேர படிகளாக ரூபா 738,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்காக வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு 2017 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 12 ஆந் திகதி வரை எந்த ஆட்சேர்ப்புக்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 05. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன், மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்காததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயலாற்றலை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று இருத்தல் அவசியமாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான இலக்குகளை அடைவதை மதிப்பிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கு தவறியிருந்தது.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தயார்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுடன் உரிய தொடர்பொன்று இல்லாமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டத்தை தயாரித்தல் மற்றும் முன் தயார்படுத்தல் செயற்பாடு மிகவும் மந்த கெதியிலும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகைகள் திட்டமொன்றும், 4.2.2 இன் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 03 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் இருக்க வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு உதவியாளரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுத்தாபனம் போதியளவில் கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.3 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | (i) திரைப்படக்கூடத்தில் காணப்படுகின்ற விளைவற்ற சொத்துக்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை. |
| | (ii) நூலகப் புத்தகங்கள் பாதுகாப்பின்றிக் வைக்கப்பட்டிருந்தமை. |
| | (iii) இருப்புப் புத்தகம் பெறுவனவு, விநியோகித்தல்களை இனங்காண்பதற்கு இலகுவான வகையில் சரியான பிரகாரம் பராமரிக்கப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) 10 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று காணப்படாமை |
| | (iii) கடனை அறவிடும் வேலைத்திட்டமொன்றோ அல்லது பிரிவொன்றோ தாபிக்கப்படவில்லை. |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | (i) திரைப்பட வாடகை வருமானம் மற்றும் வருடாந்தம் அறவிட வேண்டிய வாடகைப் பணம் தொடர்பாக மேற்பார்வையொன்று காணப்படாமை |

| | | |
|---|---|---|
| | | (ii) சினிமா திரையரங்குகளிலிருந்து கிடைத்த வருமானங்களை உறுதிப்படுத்தப்படாமல் தயாரிப்பாளரின் வாடகை வருமானத்தை பகுதியாகச் செலுத்தியமை |
| (ஈ) | கடன் கட்டுப்பாடு | திரைப்பட விளம்பர கடன் பணத்தை அறவீடு செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது வருமானத்தில் அறவிடப்படாமை |
| (உ) | கணனி மென்பொருள் முறைமைக் கட்டுப்பாடு | (i) ஒவ்வொரு உத்தியோகத்தரின் மட்டத்திற்காகவும் தனிப்பட்ட கடவுச் சொல் வழங்கப்படாமை. |
| | | (ii) பிரதான கோவையில் தரவுகளை மாற்றுதல் பதவிநிலை தரமல்லாத உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை |
| | | (iii) பெறப்பட்ட முற்பதிவுகளை (backup) அந்த இடத்திலேயே வைத்தல் |
| | | (iv) Teamviewer மென்பொருள் மற்றும் இணையத்தள வசதிகள் மூலம் வெளிநபர்களுக்கு சம்பளம் தயாரிக்கும் முறைமையில் உட்செல்லும் அபாயம் காணப்பட்டமை |